## நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 15 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் படி இறுதி இருப்புக் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி இரண்டில் குறைந்த பெறுமதியில் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 155.83 மில்லியன் ஆன இறுதி இருப்பு கணிப்பீடுதல் பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த இருப்பின் பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மேலும் குழுவின் மூலம் பயிற்சி உபகரணங்கள், மேலதிக உதிரிப் பாகங்கள் தனியாக இனங்காண்பதற்கும் மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பொருட்கள் அசைவுறாத மற்றும் மெதுவாக அசைவுறுகின்ற பொருட்களை அகற்றுமாறு 2012 ஆகஸ்ட் 06 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 மே 10 ஆம் திகதி வரையிலும் அதிகாரசபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட இருப்புக்களின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு செயற்பாடுகள் 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் அந்த செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் இருப்பு மீதியை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பித்து அதற்குரிய சீராக்கங்கள் 2023.12.31 இன் கணக்கின் மூலம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பொது முயற்சிகள் குழுவின் போது வழங்கப்பட்ட பரிந்துரையின்படி உதிரிப் பாகங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற பயிற்சிப் பொருட்கள் பிரதான இருப்புக்களில் இருந்து வேறாக்கப்பட்டு வருடாந்தம் அந்தப் பொருட்களை மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு குழுவொன்று நியமிக்குமாறு பணிப்பாளர் நாயத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் குழுவொன்று நியமிக்கப்பட்டவுடன் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் படி இருப்பு பெறுமதி கணிப்பிடப்பட வேண்டி இருந்ததுடன் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 – ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் | நிலையான சொத்துக்கள் 2022 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்பீடு செய்வதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் அதிகார சபை மேற்கொண்டுள்ளது. | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பயன்தரு |

| | | |
|---|---|---|
| இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவை மீளாய்வு செய்து எதிர்பார்க்கப்பட்ட நிலைமையில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அந்த மாற்றங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 - கணக்கீட்டு கொள்கை கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்ங்கள் மற்றும் சரியான பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். எனினும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 683.7 மில்லியன் ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் கிரயம் ரூபா 101.83 மில்லியன் ஆன தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், பொறிகள் மற்றும் தொலைத்தொடர்பு உபரணங்களை உள்ளடக்கிய நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றது. அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் நியாயமான பெறுமதி இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 மற்றும் 3 இன் பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் செயற்பாடுகளின் இறுதியின் போது நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருளாதார ஆயுட்காலம் தொடர்ந்தும் தாமதமின்றி வருடாந்தம் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டி இருந்ததுடன் பின்னர் உரிய வெளிப்படுத்தல்கள் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.2 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதிகார சபைக்குரிய வீட்டு திட்ட | பயிற்சி நடவடிக்கைகளுக்கு இடையூறு இல்லாத | விடுதி நிர்மாணிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| நிலையத்தில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களின் வதிவிட வசதிகளுக்காக 08 அறைகளையுடைய விடுதியொன்று காணப்பட்டது. 2023 மார்ச் 20 ஆம் திகதி இந்த விடுதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீகக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் அத் திகதி வரையில் 05 அறைகள் அதிகார சபையின் பதவி அணியினர் மற்றும் வரிசை அமைச்சின் பதவியணியினருக்காக உரிய அங்கீகாரம் இன்றி மற்றும் கட்டணம் அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனுடன் ஊழியர்கள் இந்த அறையில் உணவு பரிமாறுதல் போன்ற அனுமதியற்ற செயற்பாடுகளை மேற்கொண்டமையினால் மின்சாரம் மற்றும் நீர் செலவினம் அதிகரித்திருந்தமையும் அறைகளை பழுதுபார்ப்பதற்கு ஏற்படுகின்றமையினால் அதற்காக மேலதிகச் செலவினைச் செய்ததற்கு ஏற்படுகின்றமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் விடுதி வசதிகள் காணப்படாமையின் காரணமாக பயிற்சி பாடநெறிகளுக்காக விரிவுரை மண்டப வசதிகளை வழங்கும் தேவையும் இழக்கப்பட்டிருந்ததையும் புறக்கணிக்க முடியாதிருந்தது. | வகையில் அறைகள் சிலவற்றில் இருந்து அறவிடும் அடிப்படையில் பதவியணியினர்களுக்கு தங்குமிட வசதிகளுக்காக ஒதுக்குவதற்கு முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | நோக்கத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டியிருந்த ரூபா 4.72 மில்லியன் கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போது ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 6-10 வருடங்களுக்கிடையிலான கடன்பட்டோர் அளவு தொடர்பான மீதி உறுதிப்படுதல் கடிதம், மீள்நினைவூட்டல் கடிதம் 03 சந்தர்ப்பங்களின் போது | மூல ஆவணங்களுடன் கடன் மீதியை அறவிடுதல் தொடர்பாக விரிவாக சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு |

| | | |
|---|---|---|
| | அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிலுவைக் கடனுக்காக அறவிடவிட முடியாக் கடன் கடந்த ஆண்டுகளின் போது முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அநேகமான கடன்பட்டோர் தொடர்பான மூல ஆவணங்கள் அதிகாரசபையிடம் காணப்படாமையினால் உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பிரச்சினையான நிலைமை ஏற்பட்டமையினால் மூலப் பதிவேடுகள் இன்றி கணக்குகளைப் பதிவழிப்பதற்கு 2023.06.14 ஆந் திகதி நடைபெற்ற உள்ளக கணக்காய்வு முகாமைத்துவக் குழுவில் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. ஏனைய மூல ஆவணங்கள் காணப்படுகின்ற நிலுவை கடனை குறைத்துக் கொள்ளும் வகையில் அதிகார சபையின் சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அனுப்ப வேண்டி இருந்ததுடன் முறையான அங்கீகாரத்துடன் மாத்திரம் பதிவழித்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சினைக் கடந்திருந்த கூட்டுமொத்தமான ரூபா 4.70 மில்லியன் மீதி காணப்பட்ட போதும் அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கோ அல்லது அது தொடர்பாக கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கோ இதுவரை அதிகார சபை செயற்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இது தொடர்பாக கண்டறிந்து குறிப்பாக செலுத்த வேண்டிய மீதியைத் தீர்த்து வைப்பதற்கும் ஏனைய மீதிகளை அதிகார சபையின் வருமானத்திற்கு இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற பெலவத்த, பத்தரமுல்லையில் அமைந்துள்ள நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள | இந்த ரூபா 54.9 மில்லியன் தொகைக்காக 2022 ஆம் அண்டில் கணக்குகளில் ஏற்பாடுகள் இது தொடர்பாக சட்ட | இந்த பிரச்சினைகள் தொடர்பாக அதிகார சபை விரைவாக கவனம் செலுத்த |

| | | | |
|---|---|---|---|
| | காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியாக இருந்ததுடன் அதிகார சபையினால் அதில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் கிரயம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 306.15 மில்லியன் ஆகும். இந்த காணி தொடர்பாக முறையான குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக ரூபா 54.9 மில்லியன் மற்றும் 07 சதவீத தாமதக் கட்டணம் வழங்குமாறு 2019 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையால் அறிவிக்கப்பட்ட போதும் அதிகார சபையினால் வட்டி தொடர்பான சலுகையைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசை அமைச்சின் செயலாளருக்கு கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2019 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய வாடகைப் பணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ரீதியான உடன்படிக்கை அத் திகதியில் எமது அதிகார சபைக்கு சொந்தமாக காணப்படாமையால் மேற்கொள்ளப்படவில்லை. இதற்காக உள்ள ஒரே ஒரு எழுத்து மூல உறுதிப்படுத்தலான நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அனுப்பப்பட்ட கடிதம் மாத்திரம் ஆகும். | வேண்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் இறுதிக் கணக்குகளில் உரிய வெளிப்படுத்தல்கள் மற்றும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571(2) | 02 வருடங்களை விஞ்சிய செலுத்த வேண்டிய வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு | இது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள், நிதிப்பிரமாண |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அல்லது அதிகார சபையின் வருமானத்தில் செலவு வைக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2000 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் ரூபா 2.20 மில்லியன் மீளாய்வாண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை வருமானத்திற்கு இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 756 | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பற்றாக்குறை மற்றும் மிகைகள் 2023 யூன் 15 ஆம் திகதி வரை சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு மற்றும் இருப்பு மீதி கணிப்பீடுகள் முடிவடைந்த பின்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பற்றாக்குறை மற்றும் மிகைகளை இனங்கண்டு அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 சனவரி 27 ஆந் திகதிய இலக்கம் PED/01/2020 என்ற நிதி மற்றும் பொருளாதார கொள்கை அபிவிருத்தி அமைச்சு சுற்றறிக்கையின் | ஒவ்வொரு சேவைகளுக்காகவும் எடுக்கின்ற காலம் மற்றும் கட்டணங்களை காண்பித்து பிரஜைகள் விஞ்ஞாபனம் தயாரித்து அலுவலக | பிரஜைகள் விஞ்ஞாபனம் 2023 ஆம் ஆண்டின் யூலை மாதத்திற்குள் உரிய பிரகாரம் காட்சிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அதிகார சபையில் பொது மக்கள் வருகை மற்றும் நிர்வாகத்தை அபிவிருத்தி செய்வதற்காக பிரஜைகள் விஞ்ஞாபனம் தயாரித்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | 06 ஆம் பந்தி | கட்டிடத்தில் மற்றும் இணைய தளங்களில் பொதுமக்கள் / வாசகர்களுக்கு காட்சிப்படுத்துதல் வேண்டும். எனினும் அதிகார சபையினால் 2023 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | காட்சிப்படுத்தப்பட‌ல் வேண்டும். |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2015 | 06 உத்தியோகத்தர்களினால் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி 2019 ஆம் ஆண்டில் இருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 12,789 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலதிகமாக செலவிடப்பட்ட பெறுமதியான ரூபா 1.6 மில்லியன் தொகை இதுவரை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர்களுக்காக வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் அந்த பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சியிருக்குமாயின் அந்த வாகனங்களை வழங்குதல் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01/2015 இற்கு இணங்காதிருந்தமை மற்றும் நிறுவனத்தினதும் பிரிவுகளினதும் தேவைகளுக்காக மற்றும் சில சந்தர்ப்பங்களில் குழாம் கடமைகளுக்காகவும் இந்த வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையாகும். மேலும் தற்போது சுற்றறிக்கையின் பிரகாரம் அமுல்படுத்தப்படுவதுடன் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எரிபொருள் எல்லையை விஞ்சாத வகையில் எரிபொருள்களை வழங்க வேண்டியிருந்தமை மேலதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ள எரிபொருளின் பெறுமதியை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கொம்ட்ரோலர் ஜெனரலின் 2022 செப்தெம்பர் 09 ஆந் திகதிய இலக்கம் 10/2022 மற்றும் 2020 ஒக்டோபர் 02 ஆந் | ஓட்ட நிலைமையில் காணப்படாத மற்றும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொருத்தமற்ற வாகனங்களை | இந்த இரண்டு வாகனங்களையும் கைதவிர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் போது அந்த | அதிகார சபை சுற்றறிக்கையின் பிரகாரம் பயன்பாட்டிற்கு பொருத்தம் அற்ற வாகனங்களை |

| | | | |
|---|---|---|---|
| திகதியில் இலக்கம் 05/2020 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை. | கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் கிரயம் ரூபா 3.825 மில்லியன் ஆன ஜீப் வண்டி மற்றும் மோட்டார் வாகனம் என்பவற்றை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் பிரதான அலுவலகத்தால் இலங்கை வங்கி டொரிங்டன் கிளையில் பேணிச்செல்லப்படுகின்ற இலக்கம் 0077454975 என்ற நடைமுறைக் கணக்கில் சராசரியாக ரூபா 307 மில்லியன் மீதி கடந்த 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எந்தவொரு பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமல் வைப்பில் காணப்பட்டது. இதன் காரணமாக சராசரியான வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணிப்பிடும் போது அதிகார சபைக்கு அண்ணளவாக ரூபா 149 மில்லியன் வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எஞ்சி காணப்படுகின்ற திறைசேரி நிதி ஏற்பாடுகளுக்குரிய செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதை விரைவுபடுத்தி பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த குறுகிய கால மிகை பணம் குறுங்கால முதலீட்டுகளில் ஈடுபடுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் ஏனைய அங்கீரம் கிடைத்தவுடன் குறுங்கால முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகை பணத்தை உரிய இலக்கிடப்பட்ட பணிகளுக்காக உடனடியாக ஈடுபடுத்துதல் வேண்டும். உரிய நடவடிக்கைகளுக்காக ஏதாவது காலம் ஏற்படுமாயின் அந்த பணத்தை உரிய அங்கீகாரத்தின் கீழ் குறுங்கால முதலீடுகளை மேற்கொண்டு வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 43,145,508 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேர்ரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 38,129,480 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 81,274,988 வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக நிர்மாண கைத்தொழில் பின்னடைவிற்கு உட்பட்டமையின் அடிப்படையில் அதிகார சபையின் பிரதான வருமானம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| விபரம் | 2022 (ரூபா) | 2022 (ரூபா) | வேறுபாடு சாதகம் (பாதகம்) (ரூபா) | வேறுபாடு (%) |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| பதிவு செய்தல் வருமானம் | 139,858,225 | 191,818,197 | (51,959,972) | (27.1) |
| பயிற்சி பாடநெறி வருமானம் | 25,162,899 | 13,431,917 | 11,730,982 | 87.3 |
| இயந்திர பொறிமுறை வாடகை வருமானம் | 1,058,460 | 4,682,725 | (3,624,265) | (77.4) |
| வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களைப் பதிவுசெய்தல் | 4,951 | 13,965,105 | (13,960,154) | (99.9) |
| வெளியீடுகளின் விற்பனை | 3,738,821 | 5,705,653 | (1,966,832) | (34.5) |
| மாநாட்டு கட்டணங்கள் | 5,729,100 | - | 5,729,100 | 100 |
| வட்டி வருமானம் நிலையான வை | 15,069,798 | 3,938,014 | 11,131,784 | 282.7 |
| கேட்போர்கூடம் மற்றும் மாநாட்டு மண்டப வாடகை வருமானம் | 6,483,941 | 1,741,792 | 4,742,149 | 272 |
| NVQ பயிற்சி பாடநெறி | 12,233,000 | 454,000 | (11,779,000) | 2,594 |
| **செலவினம்** | | | | |
| வருகை படிகள் | 6,879,314 | 9,000,334 | 2,121,020 | 23.6 |
| மாதாந்த படிகள் | 13,546,146 | - | (13,546,146) | 100 |
| ஏனைய படிகள் | 4,157,224 | 6,287,630 | 2,130,406 | 33.9 |
| எரிபொருள் படிகள் | 3,227,366 | 776,160 | (2,451,206) | (315.8) |
| ஊக்குவிப்பு படிகள் | 5,770,144 | 3,106,332 | (2,663,812) | (86) |
| அலுவலக உபகரணங்களின் பரா | 3,720,280 | 1,830,354 | (1,889,926) | (103.2) |
| வாகன பராமரிப்பு | 4,033,805 | 2,569,639 | (1,464,166) | (56.9) |
| இயந்திர உபகரணங்களின் பராம | 165,780 | 2,166,894 | 2,001,114 | 1207.1 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நாட்டில் காணப்பட்ட சீரற்ற பொருளாதார நிலைமையின் காரணமாக அதிகார சபையின் பிரதான வருமானமான ஒப்பந்தகாரர்களின் பதிவு செய்தல் வருமானம் 27 சதவீதத்தாலும், இயந்திர பொறிமுறைகளை வாடகைக்கு வழங்குதல் வருமானம் 77 சதவீதம் மற்றும் வெளியீட்டு விற்பனை வருமானம் 35 சதவீதத்தாலும் மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தது.

- மேலும் பயிற்சி பாடநெறி வருமானம் 87 சதவீதத்தாலும், வட்டி வருமானம் 282 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

- அதிகார சபையின் செயற்பாட்டுச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட எரிபொருள் படி, மிகை ஊதிய கொடுப்பனவுகள் மற்றும் பராமரிப்பு செலவினம், கவனத்தில் கொள்ளகூடிய அளவில் அதிகரித்தமை ஆண்டின் நிதி நட்டம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| விகிதம் | ஆண்டு | |
|---|---|---|
| | **2022** | **2021** |
| நடைமுறை விகிதம் | 2.75: 1 | 2.37: 1 |
| விரைவு விகிதம் | 2.11: 1 | 1.92: 1 |
| சொத்தின் அடிப்படையிலான இலாபம் | (3.17) % | 2.47 % |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அதிகார சபையின் மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் அதிகரித்திருந்தது. நாட்டில் காணப்பட்ட சீரற்ற பொருளாதார நிலமையின் காரணமாக அதிகார சபையின் வருமானம் குறைவடைந்தமை மற்றும் செலவினங்கள் அதிகரித்தன் அடிப்படையில் இலாப பங்களிப்பு குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் முன்னாள் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் அதிகார சபையின் பணிப்பாளர் (மனித வளம்) உத்தியோகத்தர் 2022 செப்தெம்பர் 20 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளுக்காக 2023 சனவரி 20 ஆந் திகதி உறுதிச்சீட்டு இலக்கம் PC 123010090 இன் மூலம் ரூபா 0.19 மில்லியன் தொகை அரச நிர்வாக அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2018 யூலை 31 ஆந் திகதிய இலக்கம் 18/2018 என்ற சுற்றறிக்கைக்கு புறம்பாக ஆரம்ப விசாரணை உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த விசாரணை உத்தியோகத்தரின் போக்குவரத்து தேவைகளுக்காக அதிகார சபைக்குச் சொந்தமான வாகனத்தின் மூலம் 421 கிலோ மீற்றர் அளவிலான வாகன போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2023 யூன் 08 ஆந் திகதிய பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின்படி பணிப்பாளர் | ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவரால் ஆரம்ப விசாரணை அறிக்கை மற்றும் குற்றப் பத்திரிகை வழங்கியதன் பின்னர் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இந்த விடயங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் புதிய ஆரம்ப பரிசோதனைச் செலவினம் ரூபா 0.19 மில்லியன் செலுத்துவதற்குமுன் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இந்த நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் குற்றம் உறுதிப்படுத்தப்படாமையின் அடிப்படையில் குற்றப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கும் மற்றும் கட்டாய காலத்திற்காக அந்த உத்தியோகத்தருக்கு இழக்கப்பட்டிருந்த சகல படிகள் மற்றும் நலன்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் அதிகார சபைக்கு ரூபா 8 இலட்சம் அளவிலான நட்டம் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது அதிகார சபைக்குச் சொந்தமான 03 உடைந்த வாகனங்கள் ரூபா 5.78 மில்லியனுக்கு விற்பனைசெய்து நிதிக் குத்தகையின் கீழ் 03 வாகனங்கள் பெறப்பட்டிருந்தது. 2015 யூலை 10 ஆந் திகதிய இலக்கம் 2/2015 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் படி விற்பனையில் தேறிய ரூபா 5.78 மில்லியன் பொது திறைசேரிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் அந்தப் பணம் 2023 யூன் 30 ஆந் திகதி வரையிலும் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 5.78 மில்லியன் தொகை பொது திறைசேரிக்கு அனுப்புவதற்கு தேவையான அங்கீகாரம் கிடைத்த பின்னர் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் விற்பனை இலாபங்கள் பொது திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டும். |

## 3.3 குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிர்மாணத்துறையில் கட்டிட கலைஞர்களுக்காக அடையாள அட்டை வழங்குவதற்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பொது திறைசேரிகளில் இருந்து ரூபா 35.7 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. ரூபா 11.3 மில்லியன் தொகை இந்த | இந்த ரூபா 1.70 மில்லியன் முற்பண தொகை தற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன். அதற்குரிய உறுதிப்படுத்தல்கள் ஆவணங்கள் இதனுடன் சமர்ப்பிக்கப்படும். வடிவமைப்பாளர் | ஏதிர்பார்க்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக தகவல் தொழில்நுட்ப முறைமையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் சரியான மேற்பார்வையுடன் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் கீழ் (ICTA) வழங்கப்பட்டிருந்த போதும் அதிகார சபையினால் இந்த செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டமையால் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட தொகையில் ரூபா 9.6 மில்லியன் மீள அறவிடப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 1.7 மில்லியன் இந்த முறைமையில் அபிவிருத்திக்குரிய ஏனைய பணிகளுக்காக செலவிடப்பட்டமைக்கான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்தப் பணம் பயனற்ற செலவினமாக இருந்தது. எனினும் அதிகார சபையால் தேவையான பிரகாரம் தகவல் தொழில் நுட்ப முறைமையொன்றை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு ஆலோசனைச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக 2022 மார்ச் 11 ஆந் திகதி இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு ரூபா 3.35 மில்லியன் ஆன ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி, பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலத்தை காண்பிக்கப்படுகின்ற ஒட்டுமொத்த செயற்திட்ட முன்மொழிவுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக இலங்கையின் ரெலிகொம் நிறுவனத்துடன் கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | கல்குளம் செயன்முறை பயிலுனர் பயிற்சி பாடசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கூட்டுமொத்தமாக ரூபா 7.30 மில்லியன் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2023 யூன் 13 ஆந் திகதி வரையிலும் இலக்கிடப்பட்ட பணிகள் | 2022 ஆம் ஆண்டின் பொது முயற்சிகள் சுற்றறிக்கை 04/2022 இன் பிரகாரம் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படாமல் கொள்வனவு செய்தல் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்தாது இருந்ததுடன் தேவையான திட்டங்கள் மற்றும் | கிடைத்த பணத்தை பயன்படுத்தி விரைவாக இலக்கிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அந்த பணம் பயனற்ற வகையில் காணப்பட்டது. | ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதன் மிகுதி ரூபா 7.3 மில்லியனுக்குரிய திட்டமிடப்பட்ட விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீட்டுத்திட்ட நிலைய கட்டிடத்தில் 400 சதுர அடிஇட அளவு 2022 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்குவதற்காக இனங்காணப்பட்டிருந்த போதும் வாடகைக்கு வழங்கப்படாதிருந்ததுடன் பயனற்று காணப்பட்டது. | மேல்மாடியில் உள்ள 400 சதுர அடிக்கு அண்ணளவான இட அளவு நிர்மாணிப்பாளர்களின் திறன்களை பரீட்சித்து அவர்களுக்கு நிர்மாணத் துறையில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக இந்த இட அளவை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற விளைவற்ற வளங்களை பயன்படுத்தி வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 17 ஆந் திகதியில் இலக்கம் 08/2019 என்ற நிதி மற்றும் பொருளாதார கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சு சுற்றறிக்கையின் படி பெறுகை நடவடிக்கைகளுக்காக அரச இலத்திரனியல் பெறுகைகள் முறைமை 2020 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் பதிவு செய்யமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையினால் இதுவரை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டில் இருந்து அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த முறைமையின் மூலம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.6 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் செயன்முறை பயிலுனர் பயிற்சிப் பாடசாலை நடாத்திச் செல்லப்படும் கல்குளத்தில் அமைந்துள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியை கைப்பற்றிக் கொள்ளாமல் ரூபா 34.73 மில்லியன் ஆன கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மேலும் கதிர்காமத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற சுற்றுலா விடுதி கட்டிடத்தின் பெறுமதி அல்லது காணியின் உரித்து தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கோ அல்லது வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயன்முறை பயிலுனர் பயிற்சிப் பாடசாலை அமைந்துள்ள காணி அரசாங்கத்தின் காணியாக இருந்ததுடன் அதற்காக நீண்டகால உரித்தை பெற்றுக்கொள்வதற்கு திறப்பனை பிரதேச செயலகத்துடன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கதிர்காமம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி தொடர்பாக நீண்டகால குத்தகை உடன்படிக்கையின் அடிப்படையில் உரித்தை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இந்த ஆதனங்கள் தொடர்பாக குறித்துரைத்த வாடகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணி டவர்ஹோல் அரங்கு மன்றத்திற்கு உரியதாக இருந்ததுடன் ரூபா 6.00 மில்லியன் வாடகையில் 30 வருட வாடகை உடன்படிக்கை 1986 ஆம் ஆண்டின் போது கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த வாடகை உடன்படிக்கை முடிவடைந்ததன் பின்னர் 2016 ஆம் ஆண்டு முதல் மீண்டும் 30 வருட காலத்துக்காக காணியை பயன்படுத்துவதற்கு 2019 ஆம் ஆண்டின் போது புதிய வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் வாடகையை மீண்டும் மதிப்பீடு செய்யாமல் 1986 ஆம் ஆண்டில் காணப்பட்ட வாடகைப் பெறுமதியான ரூபா 6.00 மில்லியனை உள்ளடக்கி உடன்படிக்கை கைச்சாத்திடல், இடைக்கால வாடகை மேற்கொள்ளக்கூடியதாக | அதிகார சபையின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள கட்டிடம் டவர்ஹோல் அரங்கு மன்றத்துடன் 30 வருட நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் உரிமை கோரப்படுகின்றது. | இரு தரப்பினரும் இணங்கும் வகையில் நியாயமான வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். |

காண்பிக்கப்பட்டமை போன்ற பாதகமான நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டமையால் உடன்படிக்கையை திருத்துவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருந்தது.
மீண்டும் 2023 சனவரி 04 ஆம் திகதி இது தொடர்பாக நடைபெற்ற இறுதி கலந்துரையாடலின் போது இருதரப்பினராலும் 30 வருட காலத்திற்காக இரண்டாவது தடவை கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்தின் மதிப்பீட்டினால் வழங்கப்பட்ட ரூபா 3.6 மில்லியன் மாதாந்த மதிப்பீட்டு வாடகை தொகை தொடர்பாக அதிகார சபை இணங்காமையினால் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் நியாயமான வாடகை ஒன்றைச் செலுத்துதல் தொடர்பாக அதிகார சபைக்கு உள்ள ஆபத்தை புறக்கனிக்க முடியாதிருந்தது.

## 3.7 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகார சபையின் மனிதவள முகாமைத்துவத்தில் குறிப்பிடத்தக்க பிரச்சினையான நிலைமை ஏற்பட்டதன் காரணமாக உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் செல்லல், கட்டாய விடுமுறையில் அனுப்புதல், கேட்டு விலகுதல், அதிகார சபைக்கு எதிராக வழக்கு தொடர்தல், இழப்பீடு செலுத்துதல், சட்டரீதியான செலவினங்கள் அதிகரித்தமை போன்ற பாதகமான விடயங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு முதல் | 2022.04.26 ஆம் திகதி 03/2020 என்ற அரச செலவினங்களை வரையறுக்கும் சுற்றறிக்கையினால் நிறுவனத்தின் வெற்றிடங்களின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்ததன் அடிப்படையில் நிறுவனத்தின் அத்தியாவசிய சேவை நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக தேவையான பிரதான | அத்தியவசியப் பதவிகளுக்காக திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல் வேண்டும். |

கணக்காய்வு திகதியான 2023 மே 25 ஆம் திகதி வரை பணிப்பாளர் நாயக பதவி 05 சந்தர்ப்பங்களின் போதும், பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) பதவி 05 சந்தர்ப்பங்களின் போதும் மற்றும் பணிப்பாளர் (நிதி) பதவி 04 சந்தர்ப்பங்களின் போதும் நிரந்தர, பதில் கடமை, கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் கடமைகளை மேவுகை செய்தல் போன்ற அடிப்படைகளில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பதவிக் காலம் அவ்வப்போது குறுகிய கால வீச்சில் மாற்றப்பட்டிருந்தது. அது தொடர்பாக அவதானிப்புக்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றது,

முன்னாள் பணிப்பாளர் நாயகத்தால் தமது சேவையை முடிவுறுத்துதல் சட்ட ரீதியாக இல்லாதிருந்தமையை காண்பித்து 2021 மார்ச் 05 ஆம் திகதி தொழில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் இதற்காக அதிகார சபையினால் ரூபா 0.375 மில்லியன் சட்டரீதியான செலவினம் செய்யப்பட்டிருந்தது. அந்த தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் அதிகார சபையினால் ரூபா 1.70 மில்லியன் 2022 யூன் 13 ஆம் திகதி தொழில் நீதி மன்றத்தில் வைப்பு செய்யப்பட்டிருந்தது. எனினும் அதிகார சபையினால் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் மேன் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் தொழில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்மானித்தில் திருத்தி வழக்கு தீர்ப்பை பெறப்பட்மையினால் முன்னால் பணிப்பாளரால் நீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் முறைப்பாடான்று கோவையிடப்பட்பட்டிருந்தது.

அதனால் அதற்குரிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் இன்னும் முடிவடைந்திருக்கவில்லை.

பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 ஒக்டோபர் 08 ஆம் திகதி முன்னால் இருந்த அதிகார சபையின் பணிப்பாளர் (நிதி) உத்தியோகத்தர் கட்டாய விடுமுறையில் அனுப்புவதற்கு எதிராக அந்த உத்தியோகத்தரால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் 2022 யூலை 29 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் உத்தியோகத்தருக்கு சட்டரீதியாக உரித்தான சகல படிகளும் மற்றும் காணப்பட்ட சேவை நிபந்தனை நிலைமையின் கீழ் சேவை காலத்திற்கு பாதிப்பு இல்லாத வகையில் மீண்டும் சேவையில் அமர்த்துமாறும் அது தொடர்பாக 14 தரப்பினர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. இக்காரணத்தின் அடிப்படையில் அதிகார சபைக்கு ரூபா 2.60 மில்லியன் அளவிலான நட்டம் ஏற்பட்டிருந்தது. அதிகார சபையினால் மேல் நீதி மன்றத்திற்கு முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டமையினால் மேலும் இது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் அத்தியாவசிய சேவை நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக தேவையான பிரதான பதவியான பணிப்பாளர் நிதி பதவியில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அதிகாரசபையினால் மனித வளங்களை சட்ட ரீதியாக பாதுகாக்கும் வகையில் முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |
| (இ) | 2021 பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 31 ஆம் திகதி வரை பணிப்பாளர் நாயகப் பதவியில் 1½ வருட காலம் உத்தியோகத்தர்கள் இருவர் தலைவரால் பதிற் கடமைக்காக நியமிக்கப்படடிருந்தனர். இந்த கால எல்லைக்காக ரூபா 0.31 மில்லியன் பதிற் கடமை படியாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த நியமனங்களுக்காக பணிப்பாளர் சபையை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தராக பணிப்பாளர் நாயகம் இருப்பதுடன் நிறுவனம்சார் நடவடிக்கைகளில் போது அந்தப் பதவியின் செயற்பாடுகளுக்காக உத்தியோகத்தர் நியமித்தல் அத்தியவசியமாக இருந்தமையால் இந்தப் பதவிக்கு பதிற் கடமை அடிப்படையில் இந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். | அதிகாரசபையினால் மனித வளங்களை சட்டரீதியாகவும், சரியான பிரகாரமும் முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சில வருடங்களாக வெற்றிடமாகக் காணப்பட்ட பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் மனிதவள பதவி தொடர்பாக ஆட்சேர்ப்பதற்காக ரூபா 0.2 மில்லியன் தொகை 2021 ஆண்டின்போது செலவிடப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தாமையினால் அந்த செலவினம் பயனற்றதாக இருந்தது. | இந்த பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் உரிய வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ளப்படா திருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். | விண்ணப்பங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி தகுதியான நபர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | உதவிப் பணிப்பாளர் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை ஆதனங்கள் அபிவிருத்தி / மூலப்பொருள் வழங்கல்) பதவிக்காக முறையாக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கும் போது மேலும் ஒரு உத்தியோகத்தர் அந்த பதவிக்கும் கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் 2021 ஆகஸ்ட் 13 ஆந் திகதி முதல் 2023 யூலை 28 ஆந் திகதி வரை நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இரண்டு உத்தியோகத்தர்களும் ஒரே பதவியின் கடமைகளை செய்திருந்தனர். மேலும் கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமித்தல் தாபன விதிக் கோவையின் பிரகாரம் முரணாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. 2021 ஆகஸ்ட் 13 ஆந் திகதியில் இருந்து ரூபா 8,862 வீதம் படி ஒன்று இந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இவ்வாறு உள்ளபடியான பதவியின் வெற்றிடம் ஒன்று காணப்படாமல் நியமிக்கப்பட்டு ரூபா 0.19 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது | இந்த நியமனத்தை சரிசெய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு இணங்க ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. அதிகார சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உதவிப் பணிப்பாளர் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை ஆதன அபிவிருத்தி / மூலப்பொருள் வழங்கல் பதவிக்கு சிவில் / இயந்திர பொறியியலாளர் துறைக்கு தகைமை தேவையான பதவியாக இருந்த போதும் அதற்கான நூலக விஞ்ஞானம் தொடர்பான பட்டபின்படிப்பு பட்டம் மற்றும் முதல் பட்டத்தை பெற்ற உத்தியோகத்தர் அந்த பணியினை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டதன் அடிப்படையில் சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்தது. மேலும் கடமை பட்டியலுக்கு இணங்காத வகையில் வேறு கடமை பட்டியல் ஒன்று இந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆகஸ்ட் 31 வரை சட்ட செலவினம் முறையே ரூபா 0.074, 0.10, 3.39 மில்லியன் மற்றும் ரூபா 5.56 மில்லியன் ஆக அதிகரித்திருந்ததுடன் இந்த செலவினங்கள் அதிகரிப்பதற்கு மனிதவள நிர்வாகத்திலுள்ள பிரச்சினை பிரதான காரணமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 325,000 ஆக சட்ட கட்டணம் மதிப்பீடு செய்யப்பட்ட போதும் ஆண்டினுள் புதிதாக சில வழக்குகள் நிறுவனத்திற்கு சேர்ந்தமையால் சட்டக் கட்டணம் செலவினம் இதனை விட அதிகரிப்புக்கு காரணமாக இருந்தது. இதற்காக திருத்தப்பட்ட பாதீடு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | சரியான மனித வள முகாமைத்துவத்தின் மூலம் செலவினங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இல் பொது முயற்சிகள் செயற்பாட்டு கைநூல் | 2021 இன் ஆண்டறிக்கைக்காக முகாமைத்துவ சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் யூலை மாதம் இரண்டாவது | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் |

| | | |
|---|---|---|
| 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக அதிகார சபையின் ஆண்டறிக்கை இதுவரையில் பாரளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வாரத்திற்குள் அமைச்சரவைக்கு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கும் வகையில் வரிசை அமைச்சிற்கு அனுப்பும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆண்டறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் பணிகள் நாடளாவிய ரீதியில் நடாத்திச் செல்வதற்காக 15 மாவட்ட இணைப்பு அலுவலகங்கள், மாவட்ட செயலகங்கள், மாகாண செயலாளர் பொறியியல் சேவை மற்றும் கட்டிட திணைக்களம் அலுவலகங்களுடன் இணைந்ததாக அமுல்படுத்தப்படுகின்றது. எனினும் 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அந்த அலுவலகங்களால் நிறைவேற்ற வேண்டிய பணிகள், அடையப்பட வேண்டிய இலக்குகள், கால வீச்சு மற்றும் செயலாற்றல் குறிகாட்டிகள் குறித்துரைக்கப்பட்டவாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதிகார சபையின் மீளாய்வாண்டிற்குரிய செயல் முன்னேற்ற அறிக்கையும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்படாமையினால் பிரதேச அலுவலகங்களின் செயலாற்றல்களை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | மாவட்ட இணைப்பு அலுவலகங்களில் அடையப்பட வேண்டிய இலக்குகள், அடையப்பட வேண்டிய காலம், செயலாற்றல் குறிகாட்டிகள் எதிர்வரும் ஆண்டு முதல் குறித்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிரதேச அலுவலகங்களில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் மற்றும் தொடர்புடைய வேண்டிய பணிகள் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்ததுடன் மாதாந்த செயல் முன்னேற்றமும் அந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க காண்பிக்கப்படல் வேண்டும். |

## 4.3 முகாமைத்துவ தகவல் முறைமையின் வினைத்திறன்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் 4.3(iii) பந்தியின் பிரகாரம் இருப்பு முகாமைத்துவ முறையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை | அதிகாரசபையினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையில் கணக்கீட்டு தேவைகளை நிறைவேற்றும் போது வரையறுக்கப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் | சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான இருப்பு முகாமைத்துவம் ஒன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனேகமான கணக்கீட்டின் தேவைகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. அந்த விடயங்களை கவனத்தில் கொண்டு புதிய கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றின் தேவை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் புதிய கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறை மூலம் இந்த தேவையினையும் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |